முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.250/2018

அ.சா. 3

2024–ம் ஆண்டு ஜூன் 14–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி –03 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக் | ஜாதி | |
| தந்தை பெயர் | வெங்கடாசலம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.40 மணி,

Accused Senthilkumar present. Advocate Mr.Ezhilarasu present for Accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் புளியம்பட்டியில் குடியிருந்து கொண்டு கே.கே.சிக்கன் ஸ்டால் என்ற கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் கே.கே.சிக்கன் ஸ்டால் என்ற கடையில் கோழி வண்டியின் ஓட்டுநராக வேலை செய்கிறார். தேதி நினைவில்லை சுமார் 5 வருடங்களுக்கு முன்பு கோழி வண்டியில் ஆஜர் எதிரி ஓட்ட நானும் தினேஷ்குமார் என்பவரும் லோடு ஏற்றும் வேலைக்கு சின்னதிருப்பதி சென்றோம்.

2. சின்னத்திருப்பதியில் இருந்து லோடு ஏற்றிக் கொண்டு கடைக்கு வருவதற்காக வந்த போது நான் தூங்கி கொண்டு வந்தேன். திடீரென சத்தம் கேட்டது. ஆஜர் எதிரி என்னிடம் விபத்து நடந்துவிட்டதாக சொன்னார். இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபருக்கு அடிப்பட்டு இருந்தது. நான் பயணம் செய்த கோழி வண்டியின் பிக்கப் வாகனத்தின் பதிவெண் தெரியாது. இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியாது. அதன்பின்பு நானும், தினேஷ் மற்றும் ஆஜர் எதிரி ஆகியோர் காவல் நிலையம் சென்றோம் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2024.06.14 17:53:55 +0600

**செய்ய அனுமதிக்க கேட்டதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

3. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் கடந்த 03.09.2018 ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் சின்னத்திருப்பதி டூ வெள்ளார் சாலையில் சுமைதாங்கி ஏரி அருகே ஆஜர் எதிரி TN 90 2173 என்ற பதிவெண் உடைய பொளிரோ பிக்கப் வாகனத்தை வெள்ளார் நோக்கி அதிவேகமாவும் அஜாக்கரதையாகவும் ஓட்டிச் சென்று அதே சாலையில் வெள்ளார் பக்கம் இருந்து சின்னதிருப்பதி நோக்கி TN 30 AW 3850 என்ற பதிவெண் உடைய ஸ்பிளன்டர் இருசக்கர வாகனத்தில் வந்த கார்த்திகேயன் என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை மேற்படி விபத்து ஏற்படுத்திய பொளிரோ பிக்கப் வாகனத்தில் பயணம் செய்த நானும் தினேஷ்ம் நேரில் பார்த்துவிட்டு மேற்படி சங்கதிகளை விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி என்னுடன் பணிபுரியும் என் நீண்டகால நண்பர் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இல்லை

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 01.51 மணி,

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2024.06.14 17:53:59 +0600